## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
## வார பாடசாலை

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**செயலட்டை 37** | **பாடம்:- வணிகக்கல்வி** | **தரம்:13**

**தயாரிப்பு:- S. A. S. டிலக்சனி (BBA)**
**இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்**

**வாரம் 27.12.2021 – 31.12.2021**

1) வணிகர்களின் சமூக பொறுப்பினை காட்டுவதற்காக பின்பற்றும் உபாயங்கள் 5 தருக.

2) தொழில் பாதுகாப்பு மற்றும் தொழில் சுகாதார முறைமையை உறுதிப்படுத்தி வழங்கும் சான்றிதழ் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

3) அதிகூடிய சுகாதார மாயமான உற்பத்தி உணவு உற்பத்திகளை மேற்கொள்வதற்காக இலங்கை தரநிர்ணயம் வழங்கும் விருது யாது?

4) சமூகப் பொறுப்புக்கள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள சர்வதேச தர நியமங்கள் நான்கினை தருக.

5) உலகளாவிய ரீதியில் வணிகர்களும் பொருளாதாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தருக. 5ps

6) சமூகப் பொறுப்பு தொடர்பாக கீழே தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களை கூறிய நாடுகளை எழுதுக.

   - வணிகம் ஒன்றினால் சமூகத்திற்கு மீள செலுத்த வேண்டிய விடயங்களை சமூகப் பொறுப்பாகும்.
   - சமூகத்திற்கு ஏற்படும் தாக்கம் சமூக பொறுப்பு எனப்படும்.

7) விரயமாவதை இழிவுபடுத்தல் , மீண்டும் பாவனைக்கு உட்படுத்தல் , மீண்டும் உற்பத்தி கர்மங்களில் சேர்த்தல், எனும் செயற்பாடுகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?

8) வணிகம் ஒன்றில் சமூகப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டிய தரப்பினர்கள் 4 ஐ குறிப்பிடுக.

9) சில வணிக நிறுவனங்கள் தமது ஒழுக்கக் கோவையை அச்சிட்டு வெளியிடுகின்றனர் இந்த ஒழுக்கக் கோவைகளை பாதுகாக்கப்படும் 3 பிரிவினரை குறிப்பிடுக

10) புலமை சொத்து தொடர்பான வணிக விழுமியங்கள் நான்கினை வரிசைப்படுத்துக

11) நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக பொருளாதார, சமூக, சூழல் எனும் 03 துறைகளிலும் வணிகங்கள் பங்களிக்க கூடியமுறைகள் நான்கினை தனித்தனியே குறிப்பிடுக.

12) சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுவதால் வணிகங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் ஐந்திணை வரிசைப்படுத்துக

13) வணிக கர்மங்களால் சூழலுக்கு ஏற்படக்கூடிய தீங்குகள் ஆறினை குறிப்பிடுக.

14) நுகர்வோரின் ஒருவராக சூழலின் அனுகூலமான அபிவிருத்திக்கு பங்களிக்க கூடிய முறைகள் ஐந்தினை குறிப்பிடுக.

15) சமூகப் பொறுப்பை காட்டுவதற்கு கம்பனிகள் பின்பற்றும் உபாயங்கள் யாவை?